கவனிக்க.-06.05.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1706 - 2011 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2011.05.13

1706 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 308 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 326 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 327 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 08, ஏப்பிறல், 2011 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பகுதி II இற்குப் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ii) நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் 21 ஏப்பிறல், 2011 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பகுதி II இற்குப் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2011, மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மே மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# அரசாங்க அறிவித்தல்கள்

## அரச அறிவித்தல்

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு

**1934, மாசி 05 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு மற்றும் 1972, வைகாசி 05 ஆந் திகதி கொண்ட திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 51 ஆம் வாசகத்தின் கீழான அறிவித்தல்**

**அறிவித்தல்**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2அ அ வாசகத்தின் படி "ட" உப அட்டவணைக்குட்படுத்தப்பட்ட அதிகாரிகள் கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படுவார்கள்:-

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் "ட" உப அட்டவணை (திருத்தப் பட்ட அட்டவணை)

1. அதியுத்தமராம் சனாதிபதி அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/தகவல் செயலாளர்/உதவிச் செயலாளர் (தகவல்)/மேலதிக அந்தரங்க செயலாளர்/ஊடகச் செயலாளர் ஜனாதிபதி செயலாளரினால் அந்தரங்க உதவியாளர் மக்கட் தொடர்பீட்டு அதிகாரி

2. கௌரவ பிரதமரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

3. கௌரவ சபாநாயகரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

4. கௌரவ அமைச்சரவை அமைச்சர்களின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

5. கௌரவ எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

6. கௌரவ பிரதி அமைச்சர்களின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

7. கௌரவ பிரதி சபாநாயகரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

8. கௌரவ குழுக்களின் பிரதித் தலைவரின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/இணைப்பீட்டுச் செயலாளர்/மக்கட் தொடர்பீட்டு அதிகாரி/ஊடகச் செயலாளர்

9. கௌரவ திட்ட அமைச்சர்கள்/மாவட்ட அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்களின் அலுவலர் குழாம்
அந்தரங்க செயலாளர்/(மின்பிருந்த் அலுவலர் குழாய்களுக்கு மட்டும்)

10. அமைச்சரவை அமைச்சச் செயலாளரொருவரின் இணையீட்டுச் செயலாளர்/மாகாண சபையொன்றின் பிரதம செயலாளரின் இணைப்பீட்டுச் செயலாளர்/திறைசேரிப் பிரதிச் செயலாளரின் இணைப்பீட்டுச் செயலாளர்

11. அமைச்சரவை அமைச்சுக்களின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் - தகவல் (தற்போது இப்பதவி வழக்கொழிந்துள்ளது சேவையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மட்டும்).

இத்தால் கௌரவ பிரதமரின் இணைப்பீட்டுச் செயலாளர், மக்கட் தொடர்பீட்டு அதிகாரி பதவிகள் மற்றும் மேற்குறிப்பிடப்படும் அனைத்து ஊடகச் செயலாளர் பதவிகளும் 24.04.2010 ஆந் திகதி முதல் அட்டவணைப்படுத்தப்படுகின்றது.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் பற்றிய அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் பற்றிய அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2011, ஏப்பிறல் 04.

5-175